# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

தரம் - 5

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

பாடத்திட்டம்

**2022**

முன் பிள்ளைப்பருவ பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

**நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021,2022 ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக்கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவுப்படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிரார்த்திப்போம்.

## சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் ஐந்தாம் தரம் இரண்டாம் தவணைக்குரிய அத்தியாவசிய பாட உள்ளடக்கங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது சூழலை ஆராய்தல், விஞ்ஞான பூர்வமான எண்ணக்கருக்களின் பயன்பாடு, மாணவர்களுடன் செயற்படுத்த வேண்டியதுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கற்றல் பேறுகளுக்குரிய செயற்பாடுகள், விசேடமாக அழகியல், விளையாட்டு மற்றும் ஆக்கச் செயற்பாடுகள் என்பன வீட்டை அடிப்படையாகக் கொண்டு செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். அழகியல் செயற்பாடுகளுக்குரிய கவிதை, பாட்டு போன்றவற்றின் அர்த்தத்தை பாடுவதற்கு முன் மாணவர்களுக்கு விளக்கப்படுத்தி அதனை வெளிப்படுத்தும் அசைவுகளை முன்வைப்பதற்கு வழிப்படுத்தவும்.

சித்திரம் வரையும் போதும், வடிவமைக்கும் போதும், வாக்கியம் அமைக்கும் போதும் மாணவர்களிடம் காணப்படும் திறன்களின் ஊடாக தமது ஆக்கத்தை வெளிப்படுத்துவதற்கும் அவற்றுக்கு மதிப்பளித்து அவர்களின் ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கும் ஊக்கமளிப்பதாக அமைய வேண்டும். வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை செயற்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாணவர்களது திறன்கள் விருத்தியடையும் வகையில் அதற்குரிய செயற்பாடுகள் அவர்களாலேயே செய்யப்படுவதற்கு வழிப்படுத்த வேண்டும். மாணவர்களது ஆக்கங்களை, பாடசாலைக்கு வரும்போது கொண்டுவருவதற்கும் அவற்றை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கவும். தனது திறன்களை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ காட்சிப்படுத்துவதற்கும் அவற்றுக்கு மதிப்பளிப்பதற்கும் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும்.

மாணவர்களிடம் நல் எண்ணக்கருக்கள் மேலோங்கும் வகையில் ஒவ்வொரு செயற்பாடுகளையும் உள்வாங்கிக் கொள்ளவும் அன்பு, கருணை, இரக்கம், விட்டுக்கொடுப்பு போன்ற விருத்தியடைந்த மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்கும் கோபம், துன்புறுத்தல், மற்றவர்களை வருத்துதல் போன்ற விரும்பத்தகாத மனப்பாங்குகளை கட்டுப்படுத்துவதற்கும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் சமூக மனப்பாங்குடைய நபராக மேலோங்கி இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பொறுமை, ஏனையோருக்கு மதிப்பளித்தல், தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல், குழுவாக செயற்படுதல் போன்ற சமூகத் திறன்கள் விருத்தி தொடர்பாக கவனம் செலுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி ஆங்கில பாடத்திற்கு உரித்தான செயற்பாடுகளை செயற்படுத்தும் போது ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய நடைமுறைப்படுத்தவும். பாடல்களுக்கு மற்றும் சொற்களுக்கு உரிய செவிப்புல உள்ளீடுகளை (Audio materials) www.nie.lk Downloads-other.meterials English.ABOE ஊடாக பெற்றுக்கொள்ளவும்.

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| • அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 27 | 6. எமது உணவு | • தரமானதும் மருத்துவத்தன்மை கொண்டதுமான பான வகைகளை நுகரப் பழகுவார்.<br>• உணவு விரயமாகும் வழிகள் மற்றும் அவற்றை நீண்ட காலம் பேணும் முறைகள் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார்.<br>• பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதனால் ஏற்படக்கூடிய நோய் நிலைமைகள் பற்றிய விளக்கத்துடன் சுத்தமான உணவுகளை உட்கொள்வார்.<br>• சரியான நடைமுறைகளைப் பின்பற்றி உணவைப் பரிமாறுவார். | • வயதுக்குப் பொருத்தமானவாறு உயரத்தையும் நிறையையும் பேணி வருவதன் முக்கியத் துவத்தை விளங்கிச் செயற்படுவார்.<br>• நாம் உட்கொள்ளும் உணவுகளைப் பொருத்தமானவாறு வகைப்படுத்துவார்.<br>• போசணைத்தரம் பாதுகாக்கப்படும் வகையில் உணவு தயாரிப்பதில் பங்களிப்புச் செய்வார்.<br>• உணவு விளம்பரங்கள் தொடர்பான தகவல்களைக் கற்றறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• உணவைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான முறைகளைக் கையாண்டு, அதற்கமையச் செயற்படுவார். | 1<br>2<br>3-4<br>5<br>6-9 | 70-78 | 10 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| • அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 33 | 7. பாதுகாப்பும் கரிசனையும் | • விபத்துக்கள் நிகழத்தக்க வழிகள் பற்றிய அறிவூட்டத்துடன் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.<br>• தொழில்நுட்பச் சாதனங்களையும் வெவ்வேறுபட்ட சக்திகளையும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.<br>• தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகக் கையாளககூடிய சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் தொடர்பாக அறிவூட்டத்துடன் செயற்படுவார். | • இயற்கைக் காரணங்களால் நிகழக்கூடிய விபத்துக்கள் மற்றும் அவ்விபத்துக்களால் ஏற்படக்கூடிய இழப்புக்கள் / பாதிப்புகளை விபரிப்பார்.<br>• விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் அவ்வாறான விபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் வழிகளைக் கூறுவார்.<br>• மருந்து / ஔசதப் பயன்பாட்டின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் குறித்துக் கவனத்துடன் செயற்படுவார்.<br>• விபத்தொன்று நிகழ்ந்துள்ள போது வழங்க வேண்டிய முதலுதவி தொடர்பாக அனுபவங்களை விபரிப்பார்.<br>• தமக்கும் ஏனையோருக்கும் எதிராக இடம்பெறும் சமூக விரோதச் செயற்பாடுகளில் பாதுகாப்புப் பெறும் கரிசனையுடன் செயற்படுவர். | 1-8 | 84-93 | 10 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | • பல்வேறு உபகரணங்கள் கருவிகளை பாதுகாப்பாக பயன்படுத்தும் விதத்தைச் செய்துக்காட்டுவார்.<br>• அன்றாட வேலைகளுக்காக வெவ்வேறு சக்திகளை பயன்படுத்தும் போது பாதுகாப்புடனும் கரிசனையுடனும் செயற்படுவார்.<br>• தன்னையும் ஏனையோரையும் நோய்களிலிருந்து பாதுகாத்து கொள்வதற்காக செய்யக்கூடியவற்றை விளக்குவார். | | | |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| • அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 11<br>• அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 12 | 8. நீர் | • நீருடன் பல்வேறுபட்டவை இடைத்தாக்கமடையும் விதத்தைக் கண்டறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பல்வேறு வழிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நீரை வினைத்திறனாக முகாமை செய்து பாதுகாப்பாக நுகர்வார்.<br>• நீர் தொடர்பான பாரம்பரியமான பழக்கவழக்கங்களைத் தேடியறிந்து அவற்றைப் பேணிவரப் பங்களிப்புச் செய்வார்.<br>• நீர் காரணமாக ஏற்படக்கூடிய இழப்புக்கள், விபத்துக்கள் தொடர்பாகத் தேடியறிந்து அவற்றை இயன்ற அளவுக்குக் குறைப்பதில் பங்களிப்புச் செய்வார். | • வெப்பம் அதிகரித்தல் மற்றும் குறைதலுக்கேற்ப நீரில் ஏற்படும் மாற்றங் களைப் அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.<br>• தமது சுற்றப்புறச் சூழலில் நீர் மாசடைந்துள்ள விதங்களை அவதானித்து அதனைத் தவிர்க்க வேண்டிய விதம் தொடர்பான பிரேரணைகளை முன்வைப்பார்.<br>• நீருடன் தொடர்புடைய வழக்காறுகளைத் தேடியறிவார்.<br>• வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அந்நீரைப் பயன்படுத்துவதில் ஏற்படக்கூடிய பாதிப்புக் களைப் பற்றிய தகவல்களை அறிக்கைப்படுத்துவார்<br>• அன்றாடம் பயன்படுத்தத் தேவையான நீரைச் சுத்திகரிப்பதற்குப் பொருத்தமான உபகரணமொன்று அமைப்பார்.<br>• நீரை அழகுபடுத்தலைக் கூறும் பாடல்களைத் தாளலயத்துடன் பாடுவார். | 1-7<br>மற்றும்<br>9 | 95-105 | 8 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| • அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 12<br>• அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 48 | 9. வேலையை இலகு படுத்திக் கொள்ளும் வழிகள் | • வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக, தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் முற்காலங்களில் பயன்படுத்தப்பட்ட நுட்ப முறைகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவும், தரமான முழுநிறைவுக் காகவும் திட்டமிட்டு, நேர்த்தியாக, ஒழுங்கு முறையாக வேலை செய்யப் பழகிக்கொள்வார்.<br>• மின்சாரம், காந்தம், எளிய பொறிகள் ஆகியவற்றைப் பயன் படுத்தி, வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகளைத் தேடியறிந்து அறிக்கைப்டுத்துவார் | • பொருள்கள் / பண்டங்கள் ஒப்பமாகத் தொடுகையடைச் செய்வதால் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் விதத்தை இனங்கண்டு கூறுவார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் போது, மின் சாரத்தினாலும் காற்றினாலும் ஓடும் நீரினாலும் தள்ளுதல், இழுத்தல் மற்றும் சுழற்றுதல் நிகழும் விதம் பற்றிய கையாண்டு பார்தல்களைச் செய்வார்.<br>• கூட்டமாக செய்யும் வேலையொன்றினை ஆரம்பம் தொட்டு இறுதி வரையில், செயல்படும் நிலையில் வைத்திருப்பதற்காக பங்களிப்புச் செய்வார்.<br>• வீட்டிலும் பாடசாலையிலும் செய்யும் வேலைகளின் போது எளிய பொறிகளைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகக் காந்த சக்தியைப் பயன்படுத்தக்கூடிய வழிகளை உருவாக்கிக் கையாண்டு பார்ப்பார். | 1-8 | 107-117 | 10 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| • அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 38<br>• அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் 47 | 10. வீட்டுத்தோட்டம் | • திட்டமிட்ட வீட்டுத் தோட்டத்திலிருந்து அன்றாடம் தமது வீட்டுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொள்வதில் பங்களிப்புச் செய்வார்.<br>• வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆய்வுபூர்வமாகப் பங்களிப்புச் செய்து களிப்புறுவார்.<br>• செய்கை பண்ணிய பயிர்களைப் பாதுகாப்பாக கையாளும் உத்திகள் தொடர்பாக தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• கமத்தொழிலுடன் தொடர்புடைய பண்பாட்டுப் பெறுமானங்களை மதிப்பார். | • தமது அயற்சூழலில் காணப்படும் பயிர்கள் மூலம் பயிருக்குச் சாதகமான பாதகமான பிராணிகளை அவதானித்து அறிக்கைப்படுத்துக.<br>• பயிர்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகச் செய்யத்தக்கவை பற்றித் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பயிர்ச் செய்கைக் கருமங்களின் போது விளைபொருள் வீண்விரயமாகும் விதம் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• விளைப்பொருளைப் பாதுகாப்பாக எடுக்கத்தக்க நடவடிக்கைகளைப் பிரேரித்து அதற்கமையச் செயற்படுவார்.<br>• வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆய்வு பூர்வமாகப் பங்களிப்புச் செய்து களிப்புறுவார்.<br>• முற்காலத்தில் வீட்டுத் தோட்டச் செய்கைக்காகப் பயன்படுத்திய பாரம்பரியமான உத்திகள் தொடர்பான தகவல்களை அறிக்கைப்படுத்துவார். | 1-8 | 121-129 | 8 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 11. போக்குவரத்து | • வீதியில் பயணிப் போரினால் விதிமுறைகள், ஒழுக்கம் ஆகியன பற்றிய விளக்கத்துடன் வீதிகளைப் பயன்தரத்தக்க விதத்திலும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.<br>• பொது வாகனங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை மதிக்கவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்வார்.<br>• சேவையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குப் பல்வேறு வகைப்பட்ட பொறிமுறைச் சக்தியுடன் கூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படும் விதத்தை ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார். | • பாதைகளைப் பயன்படுத்தும் போது நடந்து கொள்ள வேண்டிய விதம், அனுசரிக்க வேண்டிய வீதி ஒழுக்குகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.<br>• தெருக்களில் பயணிக்கும் வாகனங்கள் வெளியிடும் / காட்டும் ஒளிச் சமிக்ஞைகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• இலங்கைப் படமொன்றின் மூலம் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தும் சில பாதைகளை அவதானித்து அவற்றை விளக்குவார்.<br>• பொது வாகனங்களைப் பாதுகாக்கத்தக்கவாறு செயற்படக்கூடிய வழிகளை விளங்கி அறிக்கைப்படுத்துவார்.<br>• போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகப் பொறிமுறைச் சக்தியைப் பயன்படுத்தத் தக்க வழிகள் பற்றிய கையாண்டு பார்த்தல்கள் செய்து தகவல்களை விபரிப்பார்.<br>• வீதிச் சமிக்ஞைத் தொகுதியொன்றின் தொழிற்பாட்டைக் காட்டும் ஆக்கம் செய்வார். | 1-6 | 138-145 | 8 மணி |

மொத்த மணித்தியாலங்கள் 54 மணித்தியாலங்கள்